Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | | |
|---|---|---|
| இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி: எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது பங்குனி 4 ஆம் நாள் துல்கஃதா 2 (17-3-64 செவ்வாய்க்கிழமை இதழ் 36

ஜி. ஸி. ஈ. உயர்தர பரீட்சை:

# அடுத்தவருடம் புதிய பாடவிதானங்கள்

## கல்லூரி அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன

கொழும்பு, திங்கள்

**ஜி. ஸி. ஈ. உயர்தர பரீட்சைக்கான பாடவிதானங்கள் அடுத்த வருடம் புதியன வாகவிருக்கும். இந்த வருடம் மட்டும் இலங்கையில் நடத்தப்படும் ஜி. ஸி. ஈ. உயர்தரப் பரீட்சைக்கான பாடவிதானங்கள் இப்போதைய பல்கலைக்கழக புகுமுகபரீட்சையின் பாடவிதானமாக இருக்கும்.**

இவ்வருடம் டிசம்பரில் இலங்கை ஜி. ஸி. ஈ. உயர்தரப் பரீட்சை முதல்முறையாக நடைபெறவிருக்கிறது இவ்வருடம் பரீட்சைக்கான பாடவிதானமாக இப்போதைய பல்கலைக்கழக புகுமுக பரீட்சையின் பாடவிதானமாகவிருக்கும். இவ்வருடம் இப்பரீட்சையே பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சையாகவும் அமையும். அடுத்த வருடத்தில் இப்பரீட்சைக்கான பாடவிதானம் புதியதாக இருக்கும். மூன்று பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும், கல்வி இலாகா, பரீட்சை பகுதி பிரதிநிதிகள் கொண்ட சபை இப்புதிய பாடத் திட்டத்தை தயார் செய்துள்ளது. இப்புதிய பாடத்திட்டம் கல்லூரி அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பரீட்சைப் பகுதி நடாத்தும் இந்த ஜி. ஸி. ஈ உயர்தரப் பரீட்சையே பல்கலைக்கழக புகுமுக பரீட்சையாகவும் இருக்கும். மாணவர்கள் ஒரு முறையில் ஒன்றுக்கோ அதற்கு மேற்பட்ட பாடங்களுக்கோ தோற்ற அனுமதிக்கப்படுவர். சித்தியெய்துபவர்களுக்கு தராதரப்பத்திரங்களை பரீட்சை இலாகாவே வழங்கும்.

## மாணவர்களுக்கு தொழில் வாய்ப்புவசதி பெறமுயற்சி

கல்லூர், செவ்வாய்

கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் கல்வி பயிலும் மாணவர்களுக்கான தொழில் வாய்ப்பு வசதிகளைத் தேடித்தரும் பொருட்டு யாழ்ப்பாணத்தின் பல்வேறு பாகங்களிலுமுள்ள கல்லூரிகளின் பழைய மாணவர் சங்கங்கள் முயற்சிகள் மேற்கொண்டுள்ளன மாணவர்களுக்குத் தொழில்துறைகளில் பயிற்சியளிக்கக் கூடிய வகையில் ஏற்பாடுகளைக் கவனிக்குமபடி இச்சங்கங்கள் கல்லூரி அதிபர்களையும் தலைமை ஆசிரியர்களையும் கேட்டு வருவதாகத் தெரிகிறது.

உயர்கல்வி பெறக்கூடிய சந்தர்ப்பமில்லாத மாணவர்களுக்கு கீழ் வகுப்புகளிலிருந்து விவசாயம், கைத்தொழில் முதலியவற்றையும் மாணவிகளுக்கு தையற்கலை, வீட்டுப்பணி முதலியவற்றையும் போதிக்க வேண்டுமென்றும் உயர்கல்வி பெறக்கூடிய மாணவிகளுக்கு அவ்வப்பகுதிகளிலுள்ள தொழில் நிலையங்களில் பயிற்சியளிக்க வகை செய்யும்படி பழைய மாணவர் சங்கங்கள் கல்லூரி அதிபர்களையும் பாடசாலைத் தலைமை ஆசிரியர்களையும் வற்புறுத்துவதென முடிவு செய்துள்ளன.

இந்த வகையில் பரீட்சார்த்தமான முயற்சி காங்கேசன் துறையில் மேற்கொள்ளப் படலாமெனத் தெரிகிறது. உயர் வகுப்புகளில் விஞ்ஞானம் பயிலும் மாணவர்களுக்கு காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் பயிற்சியளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென எதிர் பார்க்கப்படுகிறது.

காங்கேசன் துறைத் தொகுதியில் பல கல்லூரிகளிலும உள்ள மாணவ மாணவிகளுக்கு இந்தத் தொழில்துறை பயிற்சியளிக்க கல்லூரி அதிபர்கள் மூலம் கல்வி இலாகாவின் சம்மதம் பெற இப்பகுதியிலுள்ள பிரமுகர்கள் முயற்சிகள் எடுத்து வருகின்றனர்.

சமீபத்தில் கல்வியமைச்சர் திரு. பி. பி. ஜி. கலுகல்ல மாணவர்களின் தொழில் அனுபவம் சம்பந்தமாக ஆராய நியமித்துள்ள கல்விக்குழுவை இப்பிரமுகர்கள் விரைவில் சந்தித்துப் பேசுவரெனத் தெரிகிறது.

## இரு மகாநாடுகளிலும் இந்தியா பங்குபற்றும்

புதுடில்லி, மார்ச் 16

**நடுநிலைமை நாடுகளின் இரண்டாவது உச்சிமகாநாட்டுக்கான தூதர்கள் கட்டத்தில் அடுத்தவாரம் கொழும்பில் நடைபெறும் ஆயத்த மகாநாட்டிலும் பாண்டுங் பாணியில் நடைபெறவிருக்கும் மகாநாட்டுக்கான ஆயத்தக் கூட்டத்திலும் இந்தியா கலந்துகொள்ளும் என்று இந்திய வெளிவிவகார உதவி மந்திரி திரு. தினேஷ் சிங் இன்று தெரிவித்தார்.**

நடுநிலைமை மகாநாட்டுக்கான ஆலோசனைப் பட்டியலை தூதர்கள் கட்டத்தில் அடுத்த வாரம் நடைபெறும் ஆயத்தக் கூட்டம் தயாரிப்பதுடன் உச்சி மகாநாட்டுக்கு முன் வெளிவிவகார மந்திரிகள் சந்தித்துப் பேசவேண்டுமா என்பது பற்றியும ஆலோசனை செய்யும் என்றும் திரு தினேஷ்சிங் தெரிவித்தார்.

நடுநிலைமை மகாநாட்டுக்கான ஆயத்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு இலங்கை விடுத்த அழைப்பையும் மற்றொரு பாண்டுங்பாணி மகாநாட்டுக்கான ஆயத்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு இந்தோனேஷியா விடுத்த அழைப்பையும் இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

"பாண்டுங்பாணி மகாநாட்டுக்கான ஆயத்தக் கூட்டத்தில் சில அதிகாரிகள் கலந்துகொள்வார்கள், சீனாவும் அதில் கலந்துகொள்ளக்கூடும். அதனால் நமது முடிவில் மாற்றம் ஏற்படுவதற்கில்லை" என்று பிரதமர் நேரு கூறினர்.

## "தேவை ஏற்படின் சாட்சிகள் அழைப்பது அறிவிக்கப்படும்"

### பண்டாரநாயக்கா கொலை விசாரணைக் கமிஷனில் நீதிபதி

கொழும்பு, திங்கள்

திரு. தகநாயக்கா விரும்பும் சாட்சிகளை அழைக்க வேண்டிய தேவை ஏற்படின், அவருக்கு அதுபற்றி அறிவிக்கப்படும் என்று பண்டாரநாயக்கா கொலை விசாரணைக் கமிஷன் தலைமை நீதியரசர் திரு பெர்ணன்டோ இன்றைய கமிஷன் நிகழ்ச்சிகளின் ஒரு கட்டத்தில் தெரிவித்தார்.

திரு. நிமால் கருணதிலகா தனது சாட்சியத்தின் போது, தான பிரதமராக வருவதற்கு புத்தரகித்த பின்னணியாக விருந்து உதவி செய்தார் எனக் கூறியிருந்தார் எனவும் அதை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் திரு. தகநாயக்கா தெரிவித்தார்.

நீதியரசர் பெர்ணன்டோ: நீர் பிரதமாக வருவதற்கு புத்தரகித்தர உதவினர் என வைத்துக் கொண்டாலும், அதற்கும் பண்டாரநாயக்கா கொலை செய்யப்பட்டதற்கும் எவ்வித தொடர்பும் இல்லையே.

தகா: அதை தக்கமுறையில் பதிவு செய்வதால் நான் சொல்லும் சாட்சிகளை அழைக்க வேண்டிய அவசியமில்லை.

தலைமை நீதிபதி: அதே எண்ணமே எங்களுக்குமிருக்கிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

## பார்லிமெண்டைக் கூட்ட எதிர்க்கட்சிகள் முயற்சி

கொழும்பு, திங்கள்

பார்லிமெண்ட் கூட்டத் தொடரை ஜூலை 10 ம் திகதிக்கு முன்னர் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் முயற்சியில் எதிர்க் கட்சி எம். பி.க்கள் ஈடுபட்டுள்ளதாக அறியப்படுகிறது.

பார்லிமெண்டைக் கூட்ட வேண்டுமென எம். பி.க்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் கையொப்பமிட்டு கோரிக்கை விடுவதுபற்றியும் ஆலோசிக்கப்பட்டுவருவதாகத் தெரிகிறது.

இதுபற்றி ஆலோசனை செய்ய எதிர்க் கட்சியினர் விரைவில் ஒரு கூட்டத்தை நடத்தவிருக்கின்றனர். இந்தக் கூட்டம் நடத்துவதற்கான திகதி இன்னும் குறிப்பிடப் படவில்லை, எனினும் இந்த வாரத்தில் இவ்வித கூடடம் ஒன்று நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்க கட்சியைச் சேர்ந்த சில எம். பிக்களும் இதற்கு ஆதரவு தெரிவித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யு. என். பி. யின அவசர கூட்டம்

கொழும்பு, திங்கள்

பாராளுமன்ற கூட்டத்தொடர் கலைக்கப்பட்டது பற்றியும் அதனால் எழுந்துள்ள நிலைபற்றியும் ஆராய்வதற்காக ஐ தே. கட்சியைச் சேர்ந்த எம். பி. க்களின் அவசரகூட்டம் நாளைக் காலை பத்து மணிக்கு நடைபெறவிருக்கிறது. பாராளுமன்ற கூட்டத் தொடர் திடீரென கலைக்கப்பட்டதை எதிர்க்கும் சகல இயக்கங்களையும் கொண்ட எதிர்ப்பு ஸ்தாபனம் ஒன்றை கட்சி சார்பற்ற முறையில் ஏற்படுத்த நாளைய கூட்டத்தில் துரிதமுயற்சி எடுக்கப்படும் எனத் தெரியவருகிறது.

## கட்டணம் குறையும்

கொழும்பு, திங்கள்

ஆஸ்பத்திரிகளிலுள்ள சகல பணம் கட்டும் வார்டுகளிலும் ஆஸ்பத்திரிக் கட்டணம் விரைவில் குறைக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

## மணிவாக்கு

கடந்த காலம் சில பாடங்களைக் கற்றுத் தந்திருக்கிறது. வருங்காலம் நம்பிக்கையைத் தருகிறது. ஆனால் நிகழ்காலத்தின் நல்ல பொழுதை நழுவ விட்டுவிட்டால் எதிர்கால நம்பிக்கை என்றும் நிறைவேறாது.

—ராஜகுமாரி அமிர்த கௌரி.

ஈழநாடு

EELA NADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

பாழுப் ... ழசோபகிருது ஆண்டு
பங்குனி மீ 4 உ. (17-3-64)

## அரசாங்கத்தின் கடமை

மக்களுக்குத் தேவையானவைகள் எல்லாவற்றையும் அரசாங்கம் கொடுக்க முடியாதென்றும் மக்கள் தமக்காகவும் நாட்டின் நலனுக்காகவும் கடினமாக உழைக்க வேண்டுமென்றும் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா சில தினங்களுக்கு முன்னர் பெல்மதுலையில் ஒரு வைபவத்தில் பேசுகையில் கூறினர். அவரது கூற்றில் தவறில்லை. கடின உழைப்பின்றி எதையும் பெற முடியாது. நெற்செய்கைக்கு ஏற்ற நிலங்கள் இலங்கையில் நிறைய இருக்கிறதென்றும் ஏன் அந்த நிலத்தை இலங்கை மக்கள் பயன்படுத்தவில்லையென்றும் இலங்கைக்கு வரும் வெளிநாட்டார் கேட்பதாகவும் இதற்கு மக்களே பதில் சொல்ல வேண்டுமென்றும் பிரதமர் சரியாகச் சொல்லியிருக்கிறர்.

அந்நிய ஆட்சியிலிருந்து கஷ்டமின்றி விடுதலை பெற்றதால் தான் இலங்கை மக்களுக்கு சுதந்திரத்தின் அருமை தெரியவில்லை என்று துணிந்து சொல்லலாம். அந்நிய ஆட்சியிலும் காலம் கழித்த இலங்கையர் பொருளாதார சுதந்திரத்தைப் பெறுவதற்குப் பதிலாக, சில தீவிர வகுப்பு வாதிகளின் தூண்டுதலால் ஒருவித அதிகார ஆசையைப் பெற்றனர் என்று சொல்லலாம். இதன் விளைவுதான் இன்றைய பொருளாதார நெருக்கடியும் வாழ்க்கைச் செலவுக் கஷ்டமுமாகும்.

நாட்டில் நல்ல நிலமிருக்கிறது. நெற் செய்கைக்கு மட்டுமல்ல இதர உணவுப் பொருள்களையும் உற்பத்தி செய்ய முடியும். ஆள் பலத்துக்கும் பஞ்சமில்லை. ஆனால் மக்களின் உழைப்பையும் திறமையையும் பயன்படுத்தும் ஆற்றல்தான் இங்கு இல்லை. காடாகக் கிடந்த இடங்களையெல்லாம் செல்வம் கொழிக்கும் தேயிலை, றப்பர் தோட்டங்களாக மாற்றிய பரம்பரையினர் இன்னமும் இங்குதான் உள்ளனர். அவர்களை வெளியேற்ற வேண்டுமென்ற நோக்கத்தை மறந்து காடுகளை நெல்வயல்களாக்கும் பணியை அவர்களிடம் ஒப்படைத்தாலே போதுமே.

நாட்டின் நலன்கருதி, பொருளாதார சுதந்திரம் கிடைப்பதற்கு நாட்டிலுள்ள சகல மக் ளினதும் உழைப்பையும் பயன்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமை.

---

### கல்வி மந்திரியின் பொறுப்பு

ஆசிரியர்கள் இடமாற்றம் சம்பந்தமாக தாம் முன்னர் விடுத்த உத்தரவு மீறப்பட்டு வருவதாகவும் இவ்வருட முடிவுக்குள்ளாக மேலும் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டால் தாம் கடும் நடவடிக்கை எடுக்க நேரிடுமென்றும் கல்வி அமைச்சர் மாகாணக் கல்வி அதிகாரிகளுக்கு விடுத்துள்ள எச்சரிக்கை, கல்வி இலாகாவின் நிர்வாகச் சீர்கேட்டையே காட்டுவதாகவுள்ளது. பாடசாலைகளில் ஒழுங்கீனங்களும் கல்வியின் தரக்குறைவும் ஆசிரியர்கள் மத்தியில் அதிருப்தியும் நிலவுவதற்கு ஆசிரியர்கள் இடமாற்றப் பிரச்னைகள் ஓரளவு காரணமாக இருந்துவந்துள்ளதென்று கூறலாம். ஆசிரியர்களின் இடமாற்றப் பிரச்னையே கல்வித்துறையில் பெரும் குழப்பத்தையும் ஏற்படுத்திவந்திருக்கிறது.

கல்வித்துறையில் சீர்திருத்தமும் பாடசாலைகளில் ஒழுங்கும் கட்டுப்பாடும் ஏற்படுவதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்று பலரும் பல தடவைகளிலும் எடுத்துக் கூறிவந்துள்ளார்கள். ஆசிரியர்கள் நியமனம், இடமாற்றம் ஆகிய விஷயங்களில் அரசியல்வாதிகளின் தலையீடுதான் குழப்பமான நிலைமைகளுக்கெல்லாம் காரணம் என்பதை ஆசிரியர் சங்கங்களே சுட்டிக்காட்டிவந்துள்ளன.

இவற்றையெல்லாம்விட கல்வி இலாகாதான் இதற்குப் பொறுப்பாக இருந்துவந்திருக்கிறதென்பது கல்வி அமைச்சரின் சுற்றறிக்கையிலிருந்து தெளிவாகிறது.

சில தினங்களுக்கு முன்னர் பாடசாலை விழாவொன்றில் உரையாற்றிய பிரதமர் பாடசாலைகளில் மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்வதற்கும் ஒழுங்கீனங்கள் ஏற்படுவதற்கும் சில ஆசிரியர்களே காரணம் எனத் தெரிவித்திருந்தார், பிரதமரின் கூற்றிலும் உண்மை இல்லையென்று சொல்ல முடியாது. எனினும் பாடசாலைகள் சீராக நடைபெறுவதற்கும், ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவுவதற்கும் கல்விக் கொள்கையை அமுல் நடத்தும் அதிகாரிகள் பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டியது அவசியம்.

இப்பொழுதாவது உண்மை நிலையை கல்வி மந்திரி உணர்ந்துகொண்டது பாராட்டத்தக்கது. கல்வித்துறையில் குழப்பமான நிலை ஏற்படுவதற்கு மூலகாரணம் என்ன என்பதை இனியாவது கல்வி மந்திரி பூரணமாக ஆராய்ந்து ஆசிரியர்களும் மாணவர்களும் திருப்தியுடன் தமது கடமையைச் செய்ய வழிகாணவேண்டியது கல்வி மந்திரியின் பொறுப்பு.

இதேசமயம் உத்தியோக மொழி சம்பந்தமாக தலைமை ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் புதிய உத்தரவு ஒன்று விடுக்கப்பட்டுள்ளது. இது பற்றியும் கல்வி மந்திரி புனராலோசனை செய்ய வேண்டியது கல்வித்துறையின் நலனுக்கு அவசியம். உத்தியோக மொழியில் தேர்ச்சி பெறவில்லை யென்ற காரணத்துக்காக திறமையும் அனுபவமும் உடைய ஆசிரியர்களின் சேவையை மக்கள் ... இழந்து விடுவது நாட்டின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல.

# ஆசிரியரின் இடமாற்றம் மாணவரைப் பாதிக்கும்

## பெற்றோர் தின விழாவில் கல்லூரி அதிபர் உரை

உடுப்பிட்டி, திங்கள்

'ஆசிரியர்கள் காலத்துக்குக் காலம் இடமாற்றம் செய்யப்படுவதனல் மாணவர்களின் கல்வியில் தெளிவான முன்னேற்றம் காணமுடியாதிருக்கிறது' என உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபர் தி. ச. சா. செல்லத்துரை கல்லூரியின் பெற்றோர் தினவிழாவில் உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அதிபர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்றபின்னர் எமது கல்லூரியிலும் அதிகமான மாணவர்கள் சேர்ந்து பயில்கிறார்கள்.

ஆசிரியர்கள் அடிக்கடி இடமாற்றம் செய்யப்படுவதை அரசாங்கம் தற்போது குறைத்துள்ளபோதிலும் இந்த வழக்கம் இன்னும் முற்றகக் குறைந்துவிடவில்லை. அநேக ஆசிரியர்கள் அண்மையில் எமது கல்லூரியிலிருந்து மாற்றலாகிச் சென்றுள்ளார்கள். அவர்கள் இதுவரை ஆற்றிய சேவைகளுக்கு என்சார்பிலும் பெற்றோர் சார்பிலும் நன்றி தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

அதிபர், கல்லூரிப் பழைய மாணவரான விஞ்ஞானி கந்தையாவை அறிமுகம் செய்துவைத்துப் பேசுகையில் ஈழம் ஈன்றெடுத்த தமிழ்த் தவப் புதல்வன் என்று குறிப்பிட்டார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உடுப்பிட்டியைச் சேர்ந்தவரும் லண்டனில் அணு ஆராய்ச்சிக்குழுவினருள் ஒருவருமான பிரபல விஞ்ஞானி திரு. கந்தையா ஆங்கிலத்தில் பேசுகையில் கூறியதாவது:-

நான் 27 ஆண்டுகளாக மேல் நாட்டில் வசித்தமையால் தமிழில் பேசமுடியாததையிட்டு மிகவும் வருந்துகிறேன். வழக்கமாக வெளிநாடுகளில் மேற்படிப்புப் படிக்கச் செல்வோர் இறுதியில் தமது சொந்த நாட்டிற்கே திரும்பிவந்து நல்ல தொழிலொன்றில் ஈடுபடுவார்கள் ஆனல் காத்திராப்பிரகாரமாக நான் லண்டனில் பௌத்திக - அணு ஆராய்ச்சிக் குழுவில் சேர நேரிட்டுவிட்டது. எனது விஞ்ஞான ஆராய்ச்சி மனித உடலுக்கும் பொருளாதார வாழ்வுக்கும் பயன்படத்தக்க முறையிலேயே அமைந்திருக்கிறது. தன்கையே தனக்குதவி என்பதற்கிணங்க சுயதொழில்களைச் செய்து சம்பாதிக்க வேண்டும். தற்காலத்தில் விஞ்ஞானத்தின் அவசியம் நன்கு புரிகின்றது, எனவே ஒவ்வொருவரும் விஞ்ஞானக் கல்வியை நன்கு பயிலவேண்டும். இவைதான் நான் வேண்டுவன."

பெற்றோர்கள் சார்பில் பெற்றோர் ஆசிரியர் சங்கக் காரியதரிசி திரு. சுப்பிரமணியம் பேசுகையில் அதிபரின் சேவைகளைப் பாராட்டி, கல்லூரியின் முன்னேற்றத்துக்கு ஊரிலுள்ள சகல பெற்றோர்களும் உழைக்க வேண்டுமெனக் கூறினர்.

'பத்திரிகைச் சுதந்திரம்" என்னும் விஷயம்பற்றிக் கல்லூரி மாணவன் க. பரஞ்சோதி பேசுகையில் பத்திரிகைகளை அரசாங்கம் எடுப்பதால் உண்மையான ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைப்பதாக அது இருக்குமென்று கூறினர்.

விழாவின் இறுதியில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

# 'இந்தியாவுக்கு ராமன்; இலங்கைக்கு கந்தையா'

## பிரபல விஞ்ஞானிக்கு உடுப்பிட்டி எம். பி. பாராட்டு

உடுப்பிட்டி, திங்கள்

'இந்தியாவிலே ஒரு சி. வி. ராமன் போல ஈழத்திலே ஒரு கந்தையா சுடர் விளக்குப் போல் இருக்கிறர். விஞ்ஞானத்துறையில் முன்னேறுத நம் நாட்டிலிருந்து உலக விஞ்ஞானத்துக்கே ஒருவர் அழைக்கப்படுள்ளது நமக்கு ஒரு பெருமையே. இலங்கையில் அணுசக்தி ஆராய்ச்சியை மேற்கொள்ள பிரிட்டிஷ் அரசாங்கம் நம் நாட்டவரையே எமக்குக் கடனுக உதவியுள்ளது' என உடுப்பிட்டி எம்.பி. திரு. மு. சிவசிதம்பரம் உடுப்பிட்டியைச் சேர்ந்த பிரபல விஞ்ஞானி கந்தையாவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புபசாரமொன்றில் பேசுகையில் கூறினர்.

வடமராட்சி வாணி கலைக் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்வரவேற்புபசார வைபவம் கரவெட்டி சரஸ்வதி வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. திரு. கந்தையா அரசடிச் சந்தியிலிருந்து மேற்படி மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்.

திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:

வடமராட்சியின் சரித்திரத்திலேயே இன்று ஒரு திருநாள். உலகில் சிறந்த அணு ஆராய்ச்சியாளர் ஒருவர் வடமராட்சியில் அதுவும் உடுப்பிட்டித் தொகுதியில் பிறந்ததை நினைக்கவும் இவ்வூர் மக்கள் அவருக்கு வரவேற்பளிப்பதைப் பார்க்கவும் மிக்க பெருமையாகத்தானிருக்கிறது.

சோவியத் ரஷ்யா, அமெரிக்கா, இந்தியா, சீன முதலிய நாடுகளில் விஞ்ஞானிகளுக்குத் தனிமதிப்புக்கொடுத்துப் போற்றுகிறர்கள். இலங்கையில் இவர்கள் சரியானபடி ஊக்குவிக்கப்படுவதில்லை இதனுல் தான் இன்று ஈழம் விஞ்ஞானத்துறையில் பின்தங்கியுள்ளது

ஈழத்தில் அணு ஆராய்ச்சி செய்வதற்கு அத்திவாரம் அமைக்க வந்திருக்கும் திரு. கந்தையா தமது வேலைகளைத் திறமையுடன் பூர்த்தி செய்வாரென நம்புகின்றேம். அவர் புகழ் மேலும் ஓங்க வேண்டுகின்றேன்.

திரு. பொன்னம்பலம் தமது வரவேற்புரையில் திரு. கந்தையாவின் திறமையை எடுத்துக் கூறினர்.

திரு. கந்தையா தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறியதாவது:-

"நான் உங்கள்மத்தியில் ஆங்கிலத்தில் பேசுவதற்கு மன்னிக்கவேண்டும். 'ஹாவவல்' பல்கலைக்கழகத்திலுள்ள எனது நண்பர்கள் என் தாய்மொழியைப்பற்றிக் கேட்டபோது கூட அவர்களுக்குத் தகுந்த பதில் கூறமுடியாமல் இருந்தேன் என்பதையிட்டு வருந்துகிறேன்."

### வெளிநாடுகளுக்கு செல்வது தவறல்ல

சிறந்த அறிஞர்கள் இந்நாட்டைவிட்டு வெளியேறுவதைப்பற்றிச் சிலர் கவலை கொள்வதை அறிந்தேன். கல்வியைப் பொறுத்தவரை சில கருத்துக்களை பரிமாறுவதற்கு வெளிநாடுகளுக்குச் சென்று அறிஞர்களுடன்

(6-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

பார்லிமெண்ட் சபையை ஏன் நீண்டகாலத்துக்கு 'சஸ்பெண்ட்' செய்து விட்டார்கள்? இதைப் பற்றித்தான் இப்போது ஊரெல்லாம் பேச்சு.

நான்கு மாத காலத்துக்கு சபையை ஒத்திவைப்பார்களென்று யாரும் எதிர்பார்க்கவே இல்லை. பல முக்கிய மசோதாக்கள் அவசரமாக நிறைவேறவேண்டி இருக்கின்றன. அவை தவக்கப்பட்டால் அரசாங்கத்தின் வருமானம் குறையும். இன்னும் பார்லிமெண்ட் சபை அவசரமாக கவனிக்க வேண்டிய பல விஷயங்கள் மலைபோல் குவிந்துள்ளன.

சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும்கூட சபையை தொடர்ந்து நடத்தவேண்டி இருக்க இப்படி பல மாதங்களுக்கும் ஒத்திவைத்து விட்டதைக்காண அரசியல் வட்டாரங்கள் திடுக்கிட்டுள்ளன.

* * *

சோழியன் குடுமி சும்மா ஆடாதென்பார்கள். முக்கியமான காரணத்தால் தான் இவ்வித தீர்மானத்தைச் செய்திருக்கவேண்டும்.

இது மிகவும் கசப்பான ஒரு முடிவு. ஜனநாயகத்துக்கு மாறுனது பலத்த எதிர்ப்பு இருக்குமென்பது அரசாங்கத்துக்குத் தெரியும் என்றுலும் வேறுவழி இல்லாமல்தான் இவ்வித நடவடிக்கையை எடுத்திருக்கிறர்கள் என்பதில் ஐயமில்லை. இதற்கு என்ன காரணம்? இதைப்பற்றி பல பல கூறப்படுகின்றன.

பார்லிமெண்ட் சபையிலே அரசாங்கக்கட்சியில் நன்கு பேசக்கூடியவர்கள் மிகக் குறைவு. எதிர்க்கட்சிகளிலே பெரிய பெரிய பீரங்கிகள் உள்ளன. ஒவ்வொரு முறை சபை கூடும்போதும், அரசாங்கக்கட்சிக்கு வயிற்றில் நெருப்புத்தான்.

இத்துடனே அரசாங்கக்கட்சிக்கு மெஜாரிட்டி பலம் மிகவும் குறைந்துள்ளது. திடீரென வாக்கெடுப்பு நடந்து தோல்வி ஏற்பட்டு விடுமோ என்று மற்றோர் புறம் அச்சம்.

வாழ்க்கைச் செலவுகள் உயருகின்றன. தொட்டதெல்லாம் பிரச்னை. அரிசிமுதலியன வாங்க பணமில்லை. வேலையில்லாக் கஷ்டங்கள் அதிகரிக்கின்றன. அவசரகால பிரகடனம், பத்திரிகை கமிஷன் இவற்றுக்கு எதிர்ப்பு அதிகரித்துள்ளது.

தனிச் சிங்களச் சட்டத்தை அமுல் நடத்துவதால் நிர்வாக யந்திரமே கடகடத்துவிட்டது. பல பல மண்டை இடிகள் சிங்கள அறிக்கைகளும், மொழிபெயர்ப்புகளும் புரியவே இல்லை என்று சிங்கள தினசரிப் பத்திரிகைகளே எதிர்த்து தலையங்கங்கள் எழுதுகின்றன. சிங்களத்தில் மட்டுமன்றி தமிழ், ஆங்கிலம் இவற்றிலும் சுற்றறிக்கைகளை வெளியிடவேண்டுமென்று மந்திரி போட்டுள்ள உத்தரவுகளுக்கு அரசாங்க சிப்பந்திகளுக்குள்ளாகவே எதிர்ப்புகள். வால்கள் நாயை ஆட்டுகின்றன. மொழிச்சட்டத்தை அவசர அவரமாக நிறைவேற்றியதன் பலன் அரசாங்கத்துக்கு இப்போது தான் தெரிகிறது.

* * *

இதே சமயம் மொழிப் பிரச்னையில் ஒரு சமரசம்காண அரசாங்கம் பல கட்சியினரையும் கலந்துபேச ஒப்புக்கொண்டிருக்கிறது. வெளிமடையரின் எதிர்ப்புக் கூச்சல்கள் கிளம்ப ஆரம்பித்துவிட்டன. இதற்கான முயற்சியை வெற்றிகரமாக எடுக்காவிடில் நேரடிநடவடிக்கைகிளர்ச்சிகள் மறுபுறம் கிளம்பக்கூடும். இவ்வளவு சிக்கலில் அரசாங்கம் என்ன செய்வது?

* * *

பார்லிமெண்ட் சபையை ஒத்திவைப்பதால், எதிர்க்கட்சி

(6-ம் பக்கம் பார்க்க)

# சைப்ரஸ் பிரச்னை 3-வது உலக யுத்தமாக மூளலாம்

## துருக்கி அதிபர் அச்சம்

அங்காரா, மார்ச் 16

ரஷ்யாவும் தலையிட்டுள்ளதால் சைப்பிரஸ் பிரச்னை மூன்ருவது உலக யுத்தத்துக்கு வழிவகுக்கக் கூடும் என்று துருக்கி அதிபர் செமல் குர்ஸல் நேற்று எச்சரிக்கை விடுத்தார்.

சைப்பிரஸில் அமைதியை நிலைநாட்டுவதற்காக ஐ. நா. சமாதானப்படையின் முதல் அணியாக கனடா துருப்புக்களின் ஒருபகுதி அங்குசென்றுள்ளன. சுவீடன், பின்லாந்து, அயர்லாந்து துருப்புக்களும் அங்குவிரைவில் செல்லவிருக்கின்றன. சமாதானப் படையின் அதிகாரங்கள் அலுவல்கள் பற்றி ஐ. நா. அதிகாரிகள் ஆலோசனை செய்து வருகின்றனர்.

சைப்பிரஸில் துருக்கிப்படைகள் தலையிட வேண்டுமெனக் கோரி அங்காராவில் நேற்று மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

துருக்கிப் பிரதமருக்கு சோவியத் பிரதமர் குருஷ்சேவ் எழுதிய கடிதம் கிடைத்த சிலமணி நேரத்தின்பின் துருக்கி அதிபர் நிருபர்களிடம் பேசுகையில் சைப்பிரஸ் கிரேக்கர்கள் ரஷ்யாவின் ஆதரவைநாடியுள்ளதால் சைப்பிரஸ் பிரச்னை மூன்ருவது உலகயுத்தமாக மாறக்கூடுமென்று அவர் அச்சம் தெரிவித்தார். ஆனல் நாங்கள் அதற்குப் பொறுப்பல்ல என்றும் அவர் கூறினர்.

## எலிஸபெத்டெய்லரின் ஐந்தாவது கலியாணம்: பார்ட்டன் மாப்பிள்ளை

நியுயார்க், மார்ச் 16

பிரபல ஹாலிவுட் நடிகை எலிஸபெத் டெய்லரும் பிரபல நடிகர் ரிச்சார்ட்பார்ட்டனும் நேற்று கன்டாவல் மொன்றியல் என்ற இடத்தில் ஆடம்பரமற்ற முறையில் நடைபெற்ற வைபவத்தில் மணம் முடித்துக்கொண்டனர். எலிஸபெத் டெய்லருக்கு இது ஐந்தாவது கலியாணம். ரிச்சார்ட்பார்ட்டனுக்கு இது இரண்டாவது. பிரிட்டிஷ் நடிகரான பார்ட்டனும் அமெரிக்க நடிகையான டெய்லரும் பெருந்தொகையான செலவில் தயாரிக்கப்பட்டு பெருந்தொகையான வசூலைப்பெற்றுவரும் 'கிளியோபாத்ரா. படத்திலும் மற்றும் சில படங்களிலும் ஒன்ருக நடித்துள்ளனர். 'கிளியோபாத்ரா' படத்தில் நடித்தபோது தான் இவர்களுக்குள் காதல் தோன்றியதாம் உலகிலேயே அதிக தொகை வாங்கும் நடிகை எலிஸபெத் டெய்லர்தான்.

## ஜம்முவுக்கு அருகில் சண்டை நிறுத்த பேச்சு

### பாகிஸ்தான் இணக்கம்

ஸ்ரீநகர், மார்ச் 16

ஜம்முவுக்கு 20 மைல் தூரத்தில் இடுகாட்டுப் பகுதியில் சண்டை நிறுத்த உடன்பாட்டுப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பாகிஸ்தானும் இந்தியாவும் ஒப்புக் கொண்டுள்ளன. இப்பேச்சுவார்த்தைகளுக்கு ஐ. நா. மேற்பார்வைக்கமிஷன் ஒழுங்கு செய்துள்ளது இப்பேச்சுவார்த்தைகள் நாளை ஆரம்பமாகலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பகுதியில் சமீபத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்று வந்தது.

ஐ நா. இராணுவ பார்வையாளர் கோஷ்டியின் வேண்டுகோளின் பேரில் தற்காலிக சண்டை நிறுத்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து ஜம்முவுக்ுத் தெற்கே 20 மைல் தொலைவில் உள்ள இடுகாட்டுப் பகுதியில் பாகிஸ்தானியர் சுடுவது நின்றுள்ளது என்று பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் சென்ற வியாழக்கிழமை லோகசபையில் தெரிவித்திருந்தார்.

**பிரிட்டன் ஏற்க வேண்டும்**

இந்திய கல்விமந்திரி சக்ளா நிருபர்கள் மத்தியில் பேசுகையில் காஷ்மீர் பிரச்னை தீர்க்கப்பட்டு விட்டதென்பதை பிரிட்டனும் இதரநாடுகளும் உணர வேண்டும் என்று கூறினர். "சைப்பிரஸில் கிரேக்கரும் துருக்கியினரும் சண்டைபிடித்துக் கொள்கிருர்கள். ஆனல் எமது நாட்டில் இரு சமூகத்தினரும் ஒற்றுமையாக வாழ்கின்றனர். இது சிலருக்குப் பொருமையாக இருக்கிறது" என்று திரு. சக்ளா கூறினர்.

## நடிகர்படம் ஒட்டுவதில் தகராறு

### வாலிபன் தற்கொலை

சங்கரநயினர்கோயில், மார்ச்16

பலசரக்குக்கடையில் வேலை பார்த்த வாலிபருக்கும், சிறுவனுக்கும் சினிமா நடிகர்கள் சிவாஜி கணேசன், எம். ஜி. ஆர். படம் ஒட்டியதில் ஏற்பட்ட தகராறு சிவாஜி பிரியரான வாலிபரின் தற்கொலையில் முடிந்ததாகத் தெரிகிறது. இச்சம்பவம் தேவர்குளத்தில் நடைபெற்றது.

தேவர்குளம் கிராமத்தில் ஈஸ்வரன்பிள்ளை என்பவருடைய பலசரக்குக் கடையில் 22 வயதான வாலிபர் கி. அருணசலமும் 15 வயதான சிறுவன் க அருணசலமும் வேலைபார்த்து வந்தனர். வாலிபர் சிவாஜிப்பிரியராம். சிறுவன் எம். ஜி. ஆர். பிரியர். இருவரும் நடிகர்களுடைய படங்களை ஒட்டியதில் தகராறு ஏற்பட்டு வாய்ச்சண்டையாக முற்றியதாம். அச்சமயம் வாலிபர் அருணசலத்தின் அண்ணன் கடைககு வந்தார். நடிகருக்காக சண்டைபோட வேண்டாமெனக் கூறி படங்களைக் கிழித்தெறிந்தாராம்.

பின்னர் வீட்டுககுச் சென்ற வாலிபர் அருணசலம் அடுத்த நாள் காலை கழுத்தில் சுருக்கிட்டு பிரேதமாகத் தொங்கக் காணப்பட்டாராம். பொலிசார் விசாரணை செய்கின்றனர்.

## அஸாமில் மந்திரி நந்தா

### அகதி முகாம்களை பார்வையிடுவார்

கோஹாட்டி, மார்ச் 16

இந்திய உள்விவகாரமந்திரி திரு. ஜி. எல். நந்தா அஸாம் ராஜ்யத்திற்கு விஜயம் செய்துள்ளார். கிழக்குப பாகிஸ்தானிலிருந்து வந்துள்ள அகதிகள் முகாம்களை அவர்பார்வையிடுவார். அஸாம் முதன்மந்திரி திரு.பி பி சாலிகாவையும் அவர் சந்தித்து அகதிகள் பிரச்னை, பாகிஸ்தானியர் ஊடுருவல் பிரச்னைபற்றிப் பேசுவார்.

அஸாமுக்குள் பாகிஸ்தானியர் ஊடுருவல் செய்வது சம்பந்தமாக அஸாம் ராஜ்யகாங்கிரஸ் கமிட்டியினர் சமர்ப்பித்த மகஜர் ஒன்றை ஏற்றுக்கொண்ட திரு. நந்தா சட்ட விரோதமாகக் குடியேறியவர்களைத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

## பிரான்சுக்கே நன்மையில்லை

### சீனு அங்கீகாரம்பற்றி ஜோன்ஸன்

வாஷிங்டன், மார்ச் 16

கம்யூனிஸ்ட் சீனவை ஜெனரல் டிகோல் அங்கீகரித்தது விவேகமான செயல் என்ருே இதன்மூலம் பிரான்சுக்கோ ஜனநாயக உலகுக்கோ நன்மை கிடைக்குமெனவோ தாம் கருதவில்லையென அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன்ஸன் டெலிவிஷன் நிகழ்ச்சியொன்றில் தெரிவித்தார்.

சீனவை பிரான்ஸ் அங்கீகரித்ததனமூலம் ஐ. நா.வில் சீனவுக்கு அங்கத்துவம் கிடைத்துவிடுமென்று தாம் நினைக்கவில்லையென்றும் அமெரிக்க ஜனதிபதி கூறினர்.

## தமிழ் நாட்டு செய்திகள்

பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியும சோஷலிஸ்டுக் கட்சியும் இணையும் நடவடிக்கையை வரவேற்று தமிழ்நாடு பிரஜா சோஷலிஸ்டுக்கட்சி நிர்வாகக் கமிட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள சோஷலிஸ்டு சக்திகள் ஆதரவாளர்களைக் கொண்டு ஏப்ரலில் திருச்சியில் ஒரு மகாநாட்டை நடத்துவதெனவும் கமிட்டி தீர்மானித்தது.

●

திருச்சி நகரசபைத் தலைவராக ஸ்ரீ. ஏ. எஸ். ஜி லூர்துசாமிப்பிள்ளை போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பெற்ருர்.

●

கோவில் தேர்கள், ரதங்கள் செய்வதற்கும் சீர்ப்படுத்துவதற்கும் பயிற்சியளிககும் நிலையமொன்று நாகர்கோவிலில் நிறுவப்படும் தமிழ்நாடு அரசாங்கம்நிறுவவிருக்கும் இந்நிலையத்திற்கான செலவுக்கென ஏற்கனவே 34,000ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தேர் தச்சுத் தொழில் தெரிந்த கலைஞர்கள் ஒரு சிலரே இப்பொழுது உள்ளனர். பண்டைக் கலைகளில் ஒன்ருன தேர் தச்சுக்கலையைக் காப்பாற்றும் பொருட்டே இப்பயிற்சி நிலையம் நிறுவப்படுகிறது.

●

இரும்பு எஃகு ரகங்கள் சிலவற்றைக் கட்டுப்பாட்டிலிருந்து நீக்கி தாராளமாக வியாபாரம் செய்யலாம் என்று அனுமதித்ததற்கு இந்திய மந்திரி திரு சி. சுப்பிரமணியத்துக்கும் இந்திய அரசாங்கத்திற்கும் நன்றி தெரிவித்து தமிழ்நாடு இரும்பு எஃகு சில்லறை வியாபாரிகள் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

●

அருப்புக்கோட்டை பார்லிமெண்டரி தொகுதியில் லோகசபை ஸ்தானத்துக்கு நடக்கவிருக்கும் உபதேர்தலில் அபேட்சாப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் கடைசித் தினம் இம்மாதம் 18-ந் திகதியாகும். திரு. வ. முத்துராமலிங்கத் தேவர் காலமானதால் இந்த உபதேர்தல் நடைபெறுகிறது.

●

சென்னை நகரம், திருக்கழுக்குன்றம், ஓரத்தூர், ஆத்தூர், சேர்மாதேவி- ஆகிய இடங்களில் அரசாங்கத்தால் நடத்தப்பட்டுவந்த அப்பளம் உற்பத்தி நிலையங்கள், கட்டுபடியாகாத காரணத்தால் மூடப்பட்டன என்று தொழில் மந்திரி ஆர். வெங்கட்ராமன் தெரிவித்தார்.

●

காஞ்சிபுரம் திராவிடமுன்னேற்றககழக அங்கத்தினர் திரு. வி வி. ராஜகோபால் முதலியார், கோட்டை வாயில் முன்பாக மேற்கொண்ட உண்ணவிரதத்தை திரு. சி. என். அண்ணதுரையின் கோரிக்கைக்கிணங்க நிறுத்தி விட்டார்.

## "ரூபியை உயிருடன் வைத்திருக்கவேண்டும்"

டல்லாஸ், மார்ச் 16

"ஜாக்ரூபி உயிருடனிருக்க வேண்டுமென்பதே எனது விருப்பம்" என்று ஜனதிபதி கென்னடியைச் சுட்டுக் கொன்றதாகக் கருதப்படும் ஒஸ்வால்டின் தாயார் தெரிவித்தார்.

ஒஸ்வால்டை சுட்டுக்கொன்ற குற்றச்சாட்டின் கீழ் ஜாக்ரூபிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

"ஒஸ்வால்டைக் கொலைசெய்வதற்காக கூலிக்கு அமர்த்தப்பட்டவர்தான் ஜாக்ரூபி என்பது எனது நம்பிக்கை. இன்னும் பல விஷயங்கள் அம்பலத்துக்குவரவிருக்கின்றன. நான் நிரூபிக்க முடியும். எனது மகனின் சார்பில் நான் தொடர்ந்து வாதாடுவேன்" என்று அவர் சொன்னர்.

## பரிசுபெற்ற நூல்கள் மொழிபெயர்ப்பு

புதுடில்லி, மார்ச் 16

சாகித்திய அகாடமியின் 1963-ம் ஆண்டுக்கான பரிசுகள் நேற்று இங்கு நடைபெற்ற ஒரு வைபவத்தில் உபராஷ்டிரபதியினல் பரிசு பெற்ற பத்து எழுத்தாளர்களுக்கு வழங்கப்பட்டது பரிசுபெறும் பத்து எழுத்தாளர்களில் ஒருவர் காலமாகிவிட்டார். மற்றும் மூவர் விழாவுக்குச் சமுகமளிக்கவில்லை. தமிழில் "வேங்கையின் மைந்தன்" என்ற நூலுக்காக 'அகிலன்' பரிசு பெற்ருர்.

இவ் வைபவத்தில் கலாசார மந்திரி டாக்டர் ஹமாயின கபீர் பேசுகையில் பரிசு பெற்ற நூல்கள் ஒவ்வொன்றும் இதர மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வருவதாகத் தெரிவிததார்.

தூத்துக்குடி நகரசபைத் தலைவராக காங்கிரஸ் அபேட்சகர் திரு. கே. அண்ணமலை தெரிவுசெய்யப்பட்டார்.

●

சென்னை பல்கலைக்கழக சமஸ்கிருத பேராசிரியர் டாக்டர் வி. ராகவன், அமெரிக்கா, ஜப்பான், தென்கிழக்கு ஆசியா ஆகியவற்றில் மூன்றரை மாத காலம் சுற்றுப் பிரயாணம் செய்வார்.

●

குடும்பங்கள் ஐம்பது எண்ணிக்கையாக ஒன்றுசேர்ந்து கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அவற்றின் மூலமாகத் தமது தேவைகளைப் பெற்றுக் கொண்டால் தொல்லையிருக்காதென்றும் வாழ்க்கைச் செலவு உயர்வு ஏற்படாதென்றும் காங்கிரஸ் அக்கிராசனர் காமராஜ் தெரிவித்தார்.

பொற்கொல்லர்களுடைய வேலைக்குத் துணையாக இருக்கக்கூடிய கல் இழைப்பவர்கள் தங்க நகைகளுக்கு மெருகு கொடுப்பவர்கள் ஆகியோரைப் போன்ற விசேஷ கைவினைத் தொழிலாளிகள் தமது தொழிலைச் செய்வதற்கு தங்கக் கட்டுப்பாடு நிர்வாக அதிகாரி மூலம் அனுமதி வழங்கப்படும். இதற்காக தங்கக் கட்டுப்பாடு உத்தரவு திருத்தப்படவிருக்கிறது.

## உடலில் கதிரியக்க சக்தியை கண்டறிய சாதனம்

டஸ்ஸல்டார்ப் (டாட்) மார்ச் 16

உடலில் கதிரியக்க சக்தி எங்கிருந்தாலும் அதை உடனே கண்டறிய நூதன சாதனம் ஒன்று டஸ்ஸெல்டார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உடைகளில் கதிரியக்கப் பொருள் இருக்கலாம். ஆகவே அதைத் தவிர்க்க பரிசோதனைக்குள்ளாவோர் விசேடமாகித உடையை அணிய வேண்டும். இந்தப் பரிசோதனை அறை எஃகுகளினல் ஆனது. இப்போது தயாரிக்கப்படும் எல்லா எஃகுகளிலும் கதிரியக்க சக்தி இருப்பதால் யுத்தத்திற்கு முன்பு உபயோகிக்கப்பட்ட எஃகைக் கொண்டு இது தயாரிக்கப்பட்டிருக்கிறது. இப்போது மேற்குஜேர்மனியில் சுமார் 2000க்கு மேற்பட்ட ஸ்தாபனங்கள் கதிரியக்கப் பொருள்களைத் தயாரிக்கின்றன. ஆகவே கதிரியக்க ஆபத்திலிருந்து தொழிலாளர்களைக் காப்பாற்ற இம்மாதிரி பரிசோதனை ஏற்பாடுகள் அவசியப்படுகின்றன.

## தென்வியட்னும் 6 அமெரிக்கர் கொல்லப்பட்டனர்

சைகோன், மார்ச் 16

தைன்வியட்னமில் சைகோனுக்கு நூறு மைல் தென்மேற்கில் அமெரிக்க ஹெலிகொப்டர் ஒன்றையும், விமானமொன்றையும் கம்யூனிஸ்ட் கொரில்லாக்கள் சுடுவீழ்த்தியதால் ஆறு அமெரிக்கர் உட்பட ஏழு பேர் மாண்டனர். பன்னிரண்டு கொரில்லாக்களும் கொல்லப்பட்டனர்.

## நேபாள மாஜி பிரதமர் கைது

காட்மாண்டு, மார்ச் 16

நேப்பாளத்தின் முன்னுள் பிரதமர் டாக்டர் கே. ஐ. சிங் நேற்று காட்மாண்டுவில் கைதுசெய்யப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

## மிகப்பெரிய ஊர்வலம்

கொழும்பு, திங்கள்

எல்லாத் தொழிற்சங்கங்களும், இம்மாதம் 21-ம் திகதி மிகப்பெரிய ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை 'கால்பேஸ்' திடலில் நடத்தத் தீர்மானித்துள்ளது.

தொழிற் சங்கங்களின் 21 கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காகவே இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெறுகிறது. இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பங்குபற்றுபவர்களை சிகப்புநிற சட்டையும் தொப்பியும் அணிந்து வரும்படி கேட்டுள்ளார்கள்.

டாக்டர் என். எம்.பெரேரா இதற்குத் தலைமை தாங்குவார்.

## ஜெர்மனியில் கல்விமுறை

—ஐங்கரன்—

ஜெர்மனியில் 18 வயதுவரை கட்டாயமாக எல்லா மாணவர்களும் கல்வி பயிலவேண்டும் ஆறு வயதிலிருந்து 14 வயதுவரை ஆரம்ப பாடசாலையில் கல்வி பயின்றபின் பிரபாணங்களுக்கிசைய தொழிற் பயிற்சிக்குச் செல்லுகின்றனர்.

ஜெர்மனியில் பாடசாலையில் படிப்பதற்குப் பணம் கட்டவேண்டியதில்லை. எல்லோரும் இலவசமாகப் படிக்கலாம். பாடசாலையை விட்டு நீங்கியவர்களுக்குக் கல்வி போதிப்பதற்கென, ஆயிரக்கணக்கான "மக்கள் சர்வகலாசாலைகள்" இயங்குகின்றன. இக்கலாசாலைகள், எல்லா மாணவர்களும், வயது. சமயம், கட்சி, சமூகம் முதடிய பாகுபாடுகளின்றி கல்வி பயில பூரண வசதியளிக்கப்படுகின்றன. 1957-ம் ஆண்டு ஜெர்மன் அரசாங்கம பாடசாலைகளுக்காகச் செலவிட்ட தொகை 130,000 லட்சம் வெள்ளி (£ 2640 லட்சம்) ஜெர்மனியிலுள்ள பாடசாலைகளின் தொகை ஆரம்ப பாடசாலைகள்—30,770, உயர்நிலைப் பாடசாலைகள்—880, நடுநிலைப் பாடசாலைகள்—1,510, விசேட பாடசாலைகளும்—மேற்கு பெர்லின் பாடசாலைகளும்—960 தொழிற் பாடசாலைகள்-6,660 கல்விப்பயிலும் மொத்த மாணவர் தொகை: 8,588,000.

## மாலைக் காட்சி

—மா. வனிதாமணி—

மாலை நேரம் மனிதர்களுக்கு ஆறுதலான நேரம். மக்கள் மனமுங் குளிர்ந்து இருக்கும். குழந்தைகள் மகிழ்ச்சியாக விளையாடுவர். விலங்குகளும் பறவைகளும் கூட ஆனந்தமாயிருக்குஞ் சமயம் அது. கடவுளை வணங்கும் நேரம் மாலையாகும்.

கோயிலில் மணியோசை கேட்டதும் மக்கள் ஐம்புலன்களையும் ஒடுக்கி கடவுளை வழிபடும் பொருட்டு கோயிலை நோக்கிச் செல்வார்கள். கடற்கரையை அடுத்த கிராமம் அல்லது பட்டினமாயிருந்தால் மக்கள் சுத்தமான காற்றைச் சுவாசிக்கும்பொருட்டும் உல்லாசமாக நேரத்தைக் கழிக்கும் பொருட்டும் கடற்கரைக்குச் செல்லுவார்கள். மாலையில் சூரியன் மறையும் காட்சி மனதுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். அது அற்புத காட்சியாகும் இக்காட்சியைக் கண்டு களிப்படையும் இடம் கடற்கரை. அங்கு சந்திர உதய காட்சியையும் காணலாம். இயற்கையின் அழகைக் கண்ணைக் கண்டு களிக்கும் நேரம் மாலையேயாகும்.



# மாணவர் மலர்



## பாடசாலை மாணவர்களுக்கென அதிக பஸ்கள்

கொழும்பு, திங்கள் பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குப் போக்குவரத்துச் செய்வதற்காக அதிக பஸ்களை சேவையிலமர்த்த இ. போ. ச. தீர்மானித்துள்ளது.

# "விஞ்ஞானிகள் மகாநாட்டில்"

சோவியத் யூனியனின் தலைநகரமான மாஸ்கோவில் நடைபெற்ற அந்த விஞ்ஞானிகள் மகாநாட்டுக்கு இலங்கையிலிருந்து விஞ்ஞானி விஜயனும் சென்றிருந்தார். மகாநாட்டில் சகல விஞ்ஞானிகளும் பலதரப்பட்ட ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். தேநீர் அருந்தும்பொழுதும் சிகரெட் குடிக்கும்பொழுதும் சாப்பிடும்பொழுதும் அவர்கள் ஆராய்ச்சிகளில் தான் மூழ்கிக்கொண்டிருந்தனர். ஆராய்ச்சி! ஆராய்ச்சி!! அதைத்தான் அவர்கள் விரும்பினர்கள்.

சாப்பாட்டு நேரம். சிலர் சாப்பிட்டனர்; சிலர் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். சிலர் சாப்பிட்டுக்கொண்டிருக்கையிலே உணவுகள் பற்றி ஆராய்ச்சி நடத்தினர். இக்கட்டத்தில் நமது இலங்கை விஞ்ஞானி சாப்பிட்டுக்கொண்டிருந்தார். எதிர்பாராதவிதமாக அவரின் சாப்பாட்டை சில விஞ்ஞானிகள் பார்த்துவிட்டனர். என்ன ஆச்சரியம்.

"ஆமா... இதை எப்படிச் செய்தீர்கள்... என்ன கஷ்டம்... திரமான, அருமையான படைப்பு!" என்றார் ஒரு விஞ் விஞ்ஞானி.

"உங்கள் நாட்டில் சாப்பாட்டு விஷயத்தில்கூட விஞ்ஞான முறைகளைக் கையாளுகிறீர்களே! உங்கள் நாட்டுக்கு நான் அவசியம் வரவேண்டும்..." என்றார் மற்றொரு விஞ்ஞானி.

'அதை'க் கையிலெடுத்துக் கொண்டு ஆராய்ச்சியில் ஈடுபட்ட வேறொரு விஞ்ஞானி... "எவ்வளவு தொழில் நுணுக்கம்...! இதைத் தயாரிப்பதற்கு எவ்வளவு சிரமப்பட்டிருக்கவேண்டும்...! நான் ஆராய்ச்சிசெய்துகொண்டிருக்கும் திட்டத்துக்கு இது ஒரு அருமையான ஐடியா" என்றார்.

## விஜயன்

— மகான் —

"கிச்சினில்கூட தொழில் நுட்ப திறமைசாலிகள் இருப்பார்களோ? வீட்டுக்கு வேலைகாரர்கள் தேவைப்பட்டால் என்ன 'குவாலிபிக்கேஷனை' விரும்புகிறீர்கள்? சதாரணமான பி. எஸ். ஸி...?" என்று திகைப்புடன் கேட்டார் ஒரு அனுபவ விஞ்ஞானி.

"கேன் யூ டு மீ ஏ பேவர்? நான் தயாரித்துள்ள திட்டமொன்று மிகவும் சிக்கலிருந்ததாக —இதைப்போலிருக்கிறது. உங்கள் நாட்டிலிருந்து இத்துறையில் தேர்ச்சி பெற்ற பதினைந்து வேலைகாரர்களை எனக்குத் தரமுடியுமா...? வேண்டுமென்றால் ஐ கேன் கம் ரு சிலோன்..." என்றார் இன்னுமொரு விஞ்ஞானி.

திகைப்பில் மூழ்கிய நமது நாட்டு விஞ்ஞானி விஜயன், எதையோ கூறுவதற்கு வாய் திறக்க முயற்சிக்கையில் மற்றுமொரு பழுத்த விஞ்ஞானி, "ஐ கேன் கிவ் யூ ரென் தவுஸண்ட் டொலர்ஸ்... கேன் யூ ரெல் த மெதட் ரு பிறிபெயர் திஸ்...?" என்றார். அவரின் பேச்சிலே ஒருவித ஆர்வம் இருந்தது!

எல்லோருக்கும் ஒரே திகைப்பு. ஆனல் நமது விஞ்ஞானிக்கு மட்டற்ற மகிழ்ச்சி!

எல்லாவற்றையும் ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்டு இருந்த நமது விஞ்ஞானி... "இதென்ன... இதெல்லாம் சர்வசாதாரணம். நம்ம மனைவி கூட இதை 'திறீ மினிட்ஸில்' தயாரித்துவிடுவார்" என்றார். இதைக் கேட்ட விஞ்ஞானிகள் வாயில் விரலை வைத்தனர்.

விஞ்ஞானிகளைத் திகைக்க வைத்த அந்தச் சாப்பாடு தான் என்னவென்று உங்களால் கூறமுடியுமா? நீங்கள் வேறு சமையலறைக்குப் போய் ஆராய்ச்சியில் ஈடுபட்டு அம்மாவிடம் அடிபடாதீர்கள். விடையை நானே சொல்லிவிடுகிறேன். அந்தச் சாப்பாட்டின் பெயர்: இடிதயுகப்பதம்!

என்ன யோசிக்கின்றீர்கள்? பெயர் புரியவில்லையா? மேலே குறிப்பிட்ட அந்தச் சாப்பாட்டின் பெயரிலிருந்து க, த எழுத்துகளை நீக்கிவிட்டு படித்துப்பாருங்கள் விஷயம் புரியும்!

குறிப்பு:

விஞ்ஞானியாக நான் வரவேண்டுமென்று நினைத்த ஒருவர், ஒருநாள் பகல்வேளை கண்ட கனவுதான் மேலே நாடக ரூபமாகத் தரப்பட்டுள்ளது. விஞ்ஞானிகள் மன்னிக்கவும்.

### 'விசித்திர மனிதன்'

இடமின்மையால் "விசித்திர மனிதன்" இவ்வாரம் வெளியாகவில்லை. மீண்டும் அடுத்தவாரம் வெளிவருவான்.

## தமிழ்ப் புலவர்கள்

(ச. சிவராஜசிங்கம்)

தொண்டை மண்டலத்திலே சிறப்புற்று விளங்கும் காஞ்சிபுரத்திலே சுமார் 900 ஆண்டுகளுக்குமுன் ஆதிசைவர் குலத்திலே காளத்தியப்ப சிவாச்சாரியார் என்னும் பெயருடைய ஒருவர் குமரகோட்டத்தில் பூசகராக இருந்தார். அவருக்கு முருகக் கடவுளின் அருளால் ஒரு குழந்தை பிறந்தது. அதற்கு கச்சியப்பர் எனப் பெயரிட்டார். உரிய காலத்தில் கல்விப் பயிற்சி செய்வித்தார். கச்சியப்பர் வடமொழி, தென்மொழி ஆகிய இரண்டிலும் தேர்ச்சி பெற்றார்.

கச்சியப்பர் குமரக்கோட்டத்து முருகப் பெருமானை வழிபட்டு வந்தார். முருகன் திருவிளையாடல்களைப் பாட எண்ணினர். தினம் நூறு செய்யுட்கள் வீதம் பாடினர். முதல் ஆறு காண்டங்களை பன்னீராயிரம் பாடல்கள் பாடி முடித்தார். ஏழாவது காண்டத்தை இவரது மாணக்கர் குகனேரியப்ப நாவலர் பாடிமுடித்தார். இதற்கு கச்சியப்பர் "கந்தபுராணம்" எனப் பெயரிட்டார். தனது புராணத்தை அரங்கேற்ற எண்ணி கச்சியப்பர் நாட்குறித்து பலருக்கும் திருமுகம் அனுப்பினர். குறித்த நாளில் பலரும் காஞ்சிபுரத்தையடைந்தனர். மன்னர்கள், புலவர்கள், செல்வர்கள், பொதுமக்கள் ஆகியோர் கூடினர். கச்சியப்பர் முருகக் கடவுளை வணங்கி புராணத்தை படிக்கத்தொடங்கினர். அவர் பாடிய காப்புச் செய்யுளுக்கு கருத்துச் சொல்லும் போது காப்பு செய்யுளின் முதலடியாகிய "திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்" என்ற வரிக்கு "திகழ் தசக்கரம் செம்முகம் ஐந்துளான்" என்று மொழி பிரித்தும் "விளக்குமுற்றுள்ள பத்து திருக்கைகளும்" என்று பொருள் கூறினர். அப்போது அங்கு அமர்ந்திருந்த புலவர் ஒருவர் "அடிகளே! தொல்காப்பியம் முதலிய எந்த நூலிலும், "திகழ் தசம் + திகடசம்" என்று புணர்வதற்கு விதியில்லை, தாங்கள் இவ்வாறு கூறுகின்றீர்களே" என்றார். அதற்கு கச்சியப்ப சிவாச்சாரியார் 'நீங்கள் கூறியது உண்மைதான்; ஆயினும் இவ்வடியான் பாடியதன்று. முருகப்பெருமானே பாடியருளியது என்றார்.

ஆனல் புலவர் "யார் பாடியதாயினும் இலக்கண விதிக்கு ஒவ்வாததை எம்படி ஒப்புக்கொள்வது என்று கூறி முருகப் பெருமானே நேரில் எமக்குக் காட்சியளித்து இப்படி நான் பாடியது எனக் கூற வேண்டும் என்றார். அல்லது எந்த இலக்கண நூலிலாவது இவ்விதி இருக்கவேண்டும் என்றார். அதற்குக் கச்சியப்பர் இரண்டில் ஒன்று நாளை நடக்கும் என்று கூறினர். பின் முருகப் பெருமானைச் சென்று வழிபட்டார். முருகப் பெருமான் கச்சியப்பருக்குக் கனவிலே காட்சிதந்து 'அப்பனே! நீ வருந்துவதை யானறிந்தேன். வீரசோழியம் என்னும் இலக்கண நூல் ஒன்று சோழநாட்டில் உண்டு. அதன்கண் திகழ்தசம் திகடசம் என்று புணர்வதற்கு விதியுண்டு. அவ்விதி அந்நூலின் சந்திப் படலம் பதினெட்டாம் பாடலில் உள்ளது. நாளை சோழநாட்டுப் புலவன் ஒருவன் அந்நூலைக் கொண்டுவந்து அவ்விதியை எல்லாருக்கும் காட்டுவான் என கூறி மறைந்தார்.

மறுநாள் பேரவை கூடியது கச்சியப்பர் தமக்கு முருகன் கனவில் கூறியதை யாவருக்கும் சொன்னர். அதன்படி ஒரு சோழநாட்டுப் புலவர் அங்கு வந்து வீரசோழியத்தைக் காட்டி இலக்கணப் பிழையன்று என நிரூபித்தார். பின் அப்புலவர் அரங்கேற்ற "கந்தபுராணம் அரங்கேற்றத்திற்கு ஏற்பட்ட தடை இப்போதாவது நீங்கிற்று?" எனக் கேட்டு மறைந்தார். கச்சியப்ப சிவாச்சாரியார் சோழநாட்டுப் புலவராக வந்தது முருகக் கடவுளே என உணர்ந்து இன்பக்கடலில் மூழ்கினர். அவையோரும் மகிழ்ச்சியடைந்தனர். ஓராண்டிலே அரங்கேற்றம் முடிவடைந்தது. கச்சியப்பசிவாச்சாரியார் இயற்றிய கந்தபுராணம் ஒரு சிறந்த தமிழ் நூல். சிறந்த தமிழ்ப் புலவரால் இயற்றப்பட்ட கந்தபுராணம் பலரும் படித்து இன்புற ஒரு நன் நூல்.

# நமது டயறி

நமது டயறிப் பகுதிக்கு எழுதுபவர்கள் தரும் தகவல்களில் சில தவறுதல்களாகவிருப்பதால். இப்பகுதியில் ஒரு மாற்றம்—உங்களுக்கு ஒரு நன்மை செய்துள்ளோம். இப்பகுதியில் தொடர்ச்சியாக பல விபரங்கள் வெளிவரும். ஆனல் நீங்கள் எழுதியனுப்பவேண்டாம். மாணவ மாணவிகளின் நன்மையை உத்தேசித்தே இம்மாற்றத்தைச் செய்துள்ளோம்.

இப்பகுதியில் முறையே; கண்டுபிடிக்கப்பட்டவைகள், கண்டு பிடித்தவர், ஆண்டு, அவரின் தாய்நாடு போன்ற விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

1 பலூன் — மொன்கொல்பியர்—1783 - பிரான்ஸ்.
2 சைக்கிள்—மாக்மில்லன் — 1842 - ஸ்கொத்லாந்து.
3 டீஸல் என்ஜின் - டீசல் 1895 - ஜெர்மன்.
4 டைனமைட் - நோபல் - 1867 - சுவீடிஷ்.
5 துப்பாக்கி - ஹொட்ச்கிஸ் - 1875 - அமெரிக்கா.
6 இயந்திரத் துப்பாக்கி - கட்லிங் - 1861 - அமெரிக்கா.
7 சாகிதம் - திலிக்மன் - 1867 - அமெரிக்கா
8 பியானே — கிறிஸ்டோபொறி - 1709 - இத்தாலி.
9 சுழல் துப்பாக்கி - கோல்ட் - 1835 - அமெரிக்கா-
10 அச்சியந்திரம் - ஹோ - 846 - அமெரிக்கா.
11 ரடார் - டெயிலர், யங் - 1922 - அமெரிக்கா.
12 எஃகு - பெஸிமர் 1856 - பிரிட்டன்.
13 நீர்மூழ்கி - ஹொலந்து 1891 - அமெரிக்கா.
14 டெலிவிஷன் - பே - 1926 - ஸ்கொத்லாந்து.
15 தர்மோமீட்டர் - கலிலியோ - 1593 - இத்தாலி.
16 டிரக்டர் - ஹோல்ட 1900 - அமெரிகா.
17 முள்ளுக்கம்பி - கிடன் - 1874 - அமெரிக்கா.
18 எக்ஸ்ரே - ரொயென்ட்கென் - 1895 - ஜெர்மனி.
19 லினேடைப் - மேஜென்தாலர் - 1885 - அமெரிக்கா.
20 மொனேடைப் - லன்ஸ்டன் - 1887 - அமெரிக்கா.

# மூளைக்கு வேலை

இப் பந்தியில் சென்ற வாரம் நான் கேட்ட கேள்வியின் சரியான விடை: கானு நாட்டின் தலைநகரமான அக்ரா (ACCRA). சிலர் ஆக்ரா (AGRA) என்று எழுதியிருக்கிறார்கள். இது பிழை. அக்ராவுக்கும் ஆக்ராவுக்கும் வித்தியாசமுண்டு. ஏராளமானவர்கள் பிழையான விடையையே அனுப்பியுள்ளனர்.

பின்வருபவர்கள் சரியான விடையெழுதி யிருக்கின்றனர். இவர்கள் எல்லோருக்கும் எனது பாராட்டுதல்கள்.

ஜே. பி. லால், வைத்தீஸ்வரா, யாழ்ப்பாணம்., ரோகிணி சிவஞானம், வைமன் வீதி, யாழ்ப்பாணம்., ஐ. முருகையா, சூராத்தை., அ. கனகசூரியர், வெரெழு மேற்கு., என். பீ. ராகவன, கண்டிக்குளி., எஸ். லிங்கேஸ்வரநாதன், நல்லூர் கிழக்கு., என். பி. கிரிதரன், யாழ்பபாணம்., கா. இராசதுரை, சாவகச்சேரி., எ. சைமன், ஸ்டான்லி மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம்., க.ம. விபுலஸ்கந்தா, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி., இ. பங்கயச் செல்வி, விக்டோரியாகல்லூரி, சுழிபுரம் மேற்கு., இ.குமாரகுலசூரியர், சுழிபுரம் மேற்கு., பூ. சிவானந்தன், சித்தங்கேணி., ச. பரமேஸ்வரநாதன்,வட்டுக்கோட்டை., ஆ. சிவயோகம், உரும்பராய் கிழக்கு.

### கேள்வி மண்டலம்

இருவர் சந்தித்தார்கள். ஒருவர் உயர்ந்தவர். மற்றவர் சிறிது உயரம் குறைந்தவர். உயரத்தில் குறைந்தவர், வளர்ந்தவரின் மகன். ஆனல் வளர்ந்தவர் (உயரத்தில் கூடியவர்) உயரம் குறைந்தவரின் தந்தையல்ல. அப்படியானல் அவர்களிருவரின் உறவுமுறையென்ன? விடை தெரிந்தால், அந்த விடையை தபாலட்டையில் எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னர் மாணவர் மலர், "ஈழநாடு", த. பெ. 49, யழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள். மீண்டும் உங்களை அடுத்தவாரம் சந்திக்கின்றேன்.

—சாந்தா

# 1963-ல் 3,26,041 தந்திகள் தபால் மூலம் அனுப்பப்பட்டன

கொழும்பு, திங்கள்

சென்ற வருடத்தில் கொழும்பு மத்திய தந்திக்கந்தோரில் கொடுக்கப்பட்ட 326,041 தந்திகள் தபால்மூலம் அனுப்பப்பட்டதாகவும் முந்திய வருடங்களைவிட இந்த எண்ணிக்கை அதிகம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1962-ம் வருடத்தில் 253,678 தந்திகள் தபால்மூலம் அனுப்பப்பட்டன. இதுவே இவ்விதம் அனுப்பப்பட்ட தந்திகளின் எண்ணிக்கையில் உயர்ந்ததாக முன்னர் கருதப்பட்டது.

மத்திய தந்திக்கந்தோரிலிருந்து நாளொன்றுக்கு சராசரி 893 கடிதங்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டுவருவதாக அறியப்படுகிறது.

1963 ம் வருடம் டிசம்பர் மாதத்தில் 47,123 தந்திகள் தபால்மூலம் அனுப்பப்பட்டன. சென்ற வருடத்தில் இந்தியாவுக்கு 28,000 தந்திகள் விமானத்தபால்மூலம் அனுப்பப்பட்டன

ஒருவர் தந்தி கொடுத்து ஏற்றுக்கொள்ளப்பட்ட 24 மணி நேரத்தின்பின் தந்தி அனுப்பப்படாதது நிரூபிக்கப்பட்டால் தபா தந்தி விதிமுறைகளின்படி தந்திக்கெனக் கொடுக்கப்பட்ட பணம் இலாகாவினால் திருப்பிக் கொடுக்கப்படும். ஆனால் இதுவரை யாருக்கும் இவ்விதம் பணம் திருப்பிக்கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை என தந்திக் காரியாலய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவை யெல்லாவற்றுடனும் தந்திச்சேவை 1961—63-ம் நிதி வருடத்தில் ரூ. 1,810,775-41ச. வரை நஷ்டமடைந்துள்ளதாக நிர்வாக நகல் அறிக்கையிலிருந்து தெரியவருகிறது. இந்த அறிக்கை இவ்வருடம் ஜூன் மாதத்தில் வெளியிடப்படவிருக்கிறது.

## வானொலிநிகழ்ச்சிகள்

### செவ்வாய் 17-3-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை,

இரவு 6-15 கிராம சஞ்சிகை, 6-45 ஸ்ரீலங்கா குறுக்கெழுத்துப்போட்டி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நேயர் விருப்பம், 9-45 நாகஸ்வரம் வி. சுப்பிரமணியம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-30 இசைக்கோவை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 திரைப்பட இசை, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை, 2-10 பர்வதம் குஞ்சிதபாதம்—பாட்டு.

மாலை 5-15 வாத்திய கோஷ்டி இசை

இரவு 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 மரபும் மலர்ச்சியும் சிற்பத்தில—விவாதம்' 7-45 மதுரை ஸ்ரீரங்கம் ஐயங்கார்—பாட்டு, 9-15 மெல்லிசை, 9-30 வெற்றி உங்கள் பக்கம், 10-00 ஒலிமலர்.

## ஸ்கந்தவரோதயா வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையே இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 30 ரன்களால் இந்துக்கல்லூரியை வெற்றிபெற்றது.

முதலாவது இன்னிங்ஸில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 113 ஓட்டங்களையும் இந்துக் கல்லூரி 125 ரன்களையும் பெற்றன.

இரண்டாவது இன்னிங்ஸில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 126 ரன்களையும் இந்துக்கல்லூரி 84 ரன்களையும் பெற்றன.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கோஷ்டியைச் சேர்ந்த எஸ். துரேந்திரன் 62 ரன்களைப் பெற்றார். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். நந்தகுமார் 52 ரன்களை எடுத்தார். துடுப்பெடுத்தாடியவர்களில் இவ்விருவரும் திறமையாக விளையாடினார்கள்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியைச் சேர்ந்த ஆர். இராமநாதன் 32 ரன்களைக்கொடுத்து 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இந்துக்கல்லூரியைச் சேர்ந்த எஸ். ஜோதிலிங்கம், ரி. சத்தியசீலன் ஆகியோர் தலா 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். இருகோஷ்டிகளிலும் திறமையாகப் பந்து வீசியவர்கள் இவர்கள்.

இல- எல். எச் | . ட22
(460 ம் அத்தியாயக்)
காணிகொள்ளும் சட்டம்,
7-ம் பிரிவின்படியான அறிவித்தல்

கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் காணியைப் பொதுத்தேவை ஒன்றிற்கென எடுத்துக்கொள்ள எண்ணியிருக்கப்படுகின்றது. மேலதிக விபரங்களுக்குத் தயவுசெய்து 13-3-1964ந் திகதியின் 13, 986 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

அட்டவணை

கிராமப் பெயர்:- மேல்மாகாணம், களுத்துறை மாவட்டம், றைகம் கோறளை, குக்கே பத்துவ, ஒலபொடுவைக் கிராமம்.

காணிப் பெயர்:—வளுத்தகும்புற, வளுத்த கும்புற ஒவிற்ற, பரஸ்தஒவிற்ற, வலகும்புற, பரஸ்த ஒவிற்றகும்புற, நாக்கியாகும்புற.

துண்டு, படஇல:- பீ. பீ. ஏ. 5146 இல் துண்டுகள் 1 — 15.

ஆர். பாஸ்கரலிங்கம்,
களுத்துறை மாவட்ட உதவி
அரசாங்க அதிபரும்,
காணிகொள்ளும் அதிகாரியும்

யாழ்ப்பாணம்

## பாட்மிண்டன் போட்டி முடிவு

யாழ்ப்பாணம், செவ்வாய்

சமீபத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணமாவட்ட அரசாங்கசேவை விளையாட்டுச் சங்கத்தின் பாட்மிண்டன் விளையாட்டுப்போட்டியின் தரம் மிக உயர்ந்ததாக இருந்தது. முந்திய வருடங்களைவிட இம்முறை போட்டி மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது.

அரசாங்கசேவை சார்பில் விளையாடிய இலங்கை வங்கியின் யாழ்ப்பாணக்கிளை பொழுதுபோக்கு கிளப்பைச் சேர்ந்த என். பி. சேகரம், எஸ். சிவதாசன் பின்வரும் போட்டிகளில் வெற்றிபெற்றனர்.

ஆண்கள் ஒற்றையர் போட்டி- முதலாவது இடம்: என். பி. சேகரம், இரண்டாவது இடம்: எஸ். சிவதாசன். ஆண்கள் இரட்டையர் போட்டி- முதலாவது இடம்: என். பி. சேகரம், எஸ். சிவதாசன். இரண்டாவது இடம். டி. ஏ., எஸ். ஏ. சாம்பியன்கள். சேர்ந்த இரட்டையர் போட்டி- முதலாவது இடம்: ரென்சன் டடவட, செல்வி பி. எட்வாட்ஸ். இரண்டாவது இடம்: என். பி. சேகரம், செல்வி எஸ். தர்மலிங்கம்.

## சோமாஸ்கந்தா வெற்றி

உடுப்பிட்டி, சனி

நெல்லியடி அரசினர் மத்திய மஹாவித்தியாலயத்திற்கும் புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரிக்குமிடையே நெல்லியடி அ. ம. ம. வித்தியாலயத்தில் இன்று கிரிக்கெட் போட்டி நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி அ. ம. ம. வித்தியாலயக் கோஷ்டி தமது முதலாவது இன்னிங்சில் 83 ரன்களும் புத்தூர் சோமாஸ்கந்தா 91 ரன்களும் பெற்றன.

இரண்டாவது இன்னிங்சில் நெல்லியடி அ. ம. ம. வித்தியாலயம் 72 ரன்களைப் பெற்றது. புத்தூர் சோமாஸ்கந்தா தனது 9 விக்கெட்டுகளை இழந்து 66 ரன்களைப்பெற்று 2 ரன்களால் வெற்றியீட்டியது.

## யாழ்ப்பாண மாநகரசபை கேள்விப் பத்திரம்

1. பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து 30-3-64 நண்பகல் 12 மணிவரை முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் பிரதியுடன் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(a) 12 அங்குல அகலமுள்ள சீமெந்து வடிகால் ஒன்று ரெக்கிளமேஷன் 1-ம் குறுக்குத் தெருவில் மேற்குப் பகுதியில் 235 அடி நீளத்தில் கட்டுவதற்கு.

(b) மத்திய கிழக்கு வீதியில் 18 அங்குல அகலமுள்ள சீமெந்து வடிகால் ஒன்று 280 அடி நீளத்தில் கட்டுவதற்கு.

2. 30-3-64 நண்பகல் 12 மணிவரை கேள்விப்பத்திரக் கட்டுப்பணம் ரூ. 50-00ம், கேள்விப்பத்திரத்திற்கு உரிய கட்டுப்பணம் ரூ. 5-00ம் கட்டி மாநகரசபை மராமத்து எஞ்சினியரிடமிருந்து கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திர விண்ணப்பத்திற்கு உரிய மூற்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்வியாளர் வேலைப் பொருத்தத்தை ஏற்றபின் பிணைப்பணமான ரூ. 50ம் திருப்பிக் கொடுக்கப்படும்.

3. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்விப் பத்திரகாரர் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர். மாநகரசபை ஆணையாளர் அலுவலகத்தில் பந்தி (1) மேல் குறிப்பிட்ட திகதி, நேரத்தின்படி அவைகள் திறக்கப்படும்.

4. மேலும் விபரம் பெற விரும்புவோர், காரியாலய நேரத்தில் மாநகரசபை மராமத்து எஞ்சினியரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(ஒப்பம்)
டி. டி. ஜெயசிங்கா,
மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை மண்டபம்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
12 மார்ச் 1964. 116

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மூன்று சக்கர சைக்கிளுடன் பம்பாய் மிட்டாய்மிஷின் விற்பனைக்கு உண்டு. நல்ல நிலைமையிலுள்ளது. விபரங்களுக்கு: எஸ். ஆறுமுகம், 122, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 44.

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50, வைத்தியர் பரிபூரணாநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்,

### தவறிப் போயிற்று

14-3-64 சனிக்கிழமை தபால் புகையிரத வண்டியில் புத்தகங்களும், குறிப்புகளும், சில மருந்துகளும் அடங்கிய கடதாசிப் பெட்டி ஒன்று தவறிப் போய் விட்டது. அன்பர்கள் யாராவது தவறி எடுத்திருந்தால் பின்வரும் விலாசத்துக்கு தெரிவிக்கவும்.

அ. நவரத்தினராஜா, தம்பசெட்டி, பருத்தித்துறை. 47

## யாழ். மத்திய கல்லூரி-சென். ஜோன்ஸ் கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் மேற்படி இருகல்லூரிகளுக்குமிடையிலான 66-வது தொடர்ச்சியான கிரிக்கெட் போட்டி வரும் வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் (20, 21-ம் திகதி) நடைபெறும்.

### ஆட்டநேரம்

வெள்ளிக்கிழமை 20 மார்ச் 1964-பிற்பகல் 1-45—மாலை 6.
சனிக்கிழமை 21 மார்ச் 1964-காலை 9.—பகல் 12-30
பிற்பகல் 2.—மாலை 5-45

சகல மாணவர்களும் இருகல்லூரி பழைய மாணவர்களும், நண்பர்களும் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

(ஒப்பம்) எஸ். இராசநாயகம்,
காரியதரிசி, ஜே. வி. வி.,ஓ. பி. ஏ.

16மார்ச் 1964. 117


புத்துணர்ச்சியுடன்
திகழ கோயாவின்
புத்தம் புதிய
திவ்யமான,
மெல்லினிய
மணங்கமழும்
எண்ட்டைஸ்
பாவியுங்கள்



ஒரே சுகந்தமுள்ள சோப்பும் டல்க்கும் பாவித்தலே முறையானது. கோயாவின் சுகபோக சோப்பும், வியர்வை துர்நாற்றத்தையும் போக்க வல்ல உலகிலேயே மிக மிருதுவான, மென்மையான டல்க்கும், இவ்வாறு சேர்த்து பாவிப்பதற்கு சிறந்தவை.

ஒவ்வொரு நாளையும் பரிமள புத்துணர்ச்சியுடன் துவங்க, கோயாவின் சுகந்த எண்ட்டைஸ் பாவியுங்கள்.
அதன் இனிய நறுமணம் நாள் முழுவதும் உங்கள் உடலை சூழ்ந்து நிற்கும்.




மற்றும் லவ் எப்பேர் பாஸ்போர்ட்
ப்ளாக் ரோஸ் கார்டீனியா
நம்பர் 5 சுகந்தங்களிலும் கிடைக்கும்.

கோயா ● லண்டன் ● பாரீஸ் ● நியு யோர்க்

வடபகுதி அசைஸ்விசாரணை

# கத்தியால் குத்தியதாக இறந்தவர் கூறினர்

## தோலகட்டி கொலை வழக்கில் டாக்டர் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்வாய் வடபகுதி அசைஸ் விசாரணைகள் நேற்று முற்பகல் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியு ஸி. முன்னிலையில் ஆரம்பமானபோது முதல் வழக்காக வசாவிளான் தோலகட்டி சொலைவழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

இவ்வழக்கில் 1962-ம் ஆண்டு ஆகஸ்ட் 28-ம் திகதி சீமான் தோமஸ் என்பவர் தோலகட்டியைச் சேர்ந்த வசாவிளானில் செபமாலை மனைவி அந்தோனிசாவைக் காயப்படுத்தி அச் செயலின்மூலம் அவருக்கு மரணம் ஏற்படுத்தியதால் அவரைக்கொலைசெய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள்சார்பில் வழக்கறிஞர் ரி. கணேசலிங்கம், ஜி எஸ் நடேசனின் உதவியுடனும் திருவாளர்கள் அல்பிரட் துரையப்பா, ஏ. அமிர்தலிங்கம் ஆகியோரின் அனுசரணையுடனும் ஆஜரானர். எதிரிக்காக அரசாங்கசார்பில் திரு. ரி. எஸ். ஆனந்தகுமார்சாமி நியமிக்கப்படடிருந்தார். முடிக்குரியதர்ப்பில் திரு. ஏ. ஏ. டீ. சில்வா ஆஜரானர்.

முன்னள் சட்டவைத்திய அதிகாரி டாக்டர் வைத்திலிங்கம் சாட்சியமளித்தபோது கூறியதாவது:-

1962-ம் ஆண்டு ஆகஸ்ட் 29-ம் திகதி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் கடமையாற்றினேன். அன்று காயமடைந்த அந்தோனிசாவை பரிசோதனை செய்தேன். வலதுபுற நெற்றியில் மூன்றரை அங்குல நீளமான காயம் காணபபட்டது. காயமடைந்தவரிடம் எப்படிக் காயம் வந்ததெனக் கேட்டபொழுது, அவர் தோமாஸ் கத்தியால் குத்தியதாகக் கூறினர். அவர் தமிழில் கூறினர்.

நீதியரசர்: தமிழில் எப்படிக் கூறினர்?

டாக்டர்: "தோமாஸ் நேற்று கத்தியால் குத்தினன்" என்று! நான் தொடர்ந்து சிகிச்சை செய்யவில்லை. டாக்டர் ஷேக்ஸ்பியர் வைத்தியம் செய்தார்' 63-ம் ஆண்டு ஜூலை மாதம் 31-ந் திகதி பிரேத பரிசோதனை நடத்தினேன். செபமாலை திருச்செல்வம், சில்வஸ்டர் அருளப்பு ஆகியோர் அடையாளம் கண்டுகொண்டார்கள அன்று காலை 10 மணிக்கு மரண விசாரணை நடத்தினேன். அவர் காலமானபோது நான் இருக்கவில்லை. முந்திய காயத்தைப் பரிசோதனைசெய்தேன். பரிசோதனை செய்வதற்கு12 முதல் 36 மணித்தியாலத்திற்கு இடையில் இறந்திருக்கவேண்டும். முந்தினகாயத்தினல்தான் மரணமானர். மரணத்திற்கான வேறு காயங்கள் காணபபடவில்லை. நான் 13 வருடங்களாக கடமையாற்றுகிறேன். அஸைஸ் நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருக்கிறேன்.

வழக்கறிஞர் ரி. கணேசலிங்கம் குறுக்குவிசாரணை செய்தபோது திரு. வைத்திலிங்கம் 13 வருடங்களாக கடமையாற்றுவதாகவும், 2 வருடங்கள் யாழ்ப்பாண சட்டவைத்திய அதிகாரியாக கடமையாற்றியுள்ளாரேன்றும் இறந்தவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபோது தான் நிற்கவில்லை யென்றும் கூறினர்,

வழக்கறிஞர்: உங்களுக்குத் தமிழ்மொழி விளங்குமா?

டாக்டர்: ஆம்.

தழக்: அடிப்பதற்கும் குத்துவதற்கும் வித்தியாசம் தெரியுமா?

டாக்: ஆம்,

வழக்: எப்படி அவரிடம் கேட்டீர்?

டாக்டர்: காயம் எப்படி ஏற்பட்டதென்று கேட்டபோது தோமாஸ் குத்திப் போட்டானென்று கூறினர். என்னத்தால் குத்தினரென்று கேட்டபோது கத்தியால் என்ருர்.

வழக்: இரண்டு வருடங்களிலும் எத்தனை பேரைப் பரிசோதனை செய்திருடபீர்?

டாக்டர்: மாதம் 125 பேர் வீதம் பரிசோதனை செய்திருப்பேன்.

வழக்: அப்படியாஞல் அவர் கூறியது இப்பொழுதும் ஞாபகம் இருக்கிறதா?

டாக்டர்: ஆம். இறந்தவர் மறுநாள்வரை மயக்கமாயிருந்தார். 18 நாள்வரை ஆஸ்பத்திரியில் இருந்தார். திரும்பவும் எப்பொழுது ஆஸபத்திரியில் சேர்க்கப்பட்டாரென்று எனக்குத் தெரியாது இறந்தவருக்கு 45 வயது இருக்கும். ஏற்கனவே ஏற்பட்ட சாயம் மாறியிருந்தது.

இன்று காலை 9-15 மணிவரை விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

---


வெற்றிகரமான 3-வதுவாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு)

மற்றும் 3 திரைகளில்

சிவாஜி கணேசன் — விஜயகுமாரி

மூத்துராமன் — சௌகார் ஜானகி

மற்றும் பலர் நடிக்கும்



பார் மகளே பார்

பணம், அந்தஸ்து, மதிப்பு இவைதான் வாழ்க்கையின் உயிர்நாடி என்று கருதும் ஜமீன்தாராக நடிகர்திலகமும் அவரது இரு புதல்விகளாக புஷ்பலதாவும் விஜயகுமாரியும் தோன்றுகிறர்கள்


## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பீரங்கிகளின் சத்தம் குறையலாம் ஆனல் ஆபத்துக் குறையவோ, பிரச்னை தீரவோ முடியாது.

மேற்குறித்த பிரச்னைகள் தீரவேண்டுமானல், அரசாங்கக் கட்சியை வலுப்படுத்தவேண்டும். இதற்காக பிலிப் குணவர்த்தனவுக்கு மந்திரிப் பதவி அளிக்கப்படலாமென்று பலத்த வதந்தி உலவுவதாக 'அப்ஸவர்' பத்திரிகை கூறுகிறது.

இது உண்மையாகுமா? இடதுசாரி ஐக்கிய முன்னணி இதற்கு ஒப்புமா? அல்லது பிலிப் அந்த முன்னணியிலிருந்து விலகுவாரா? இவை ருசிகரமான கேள்விகள். சில நாட்களில் இதற்கெல்லாம் பதில் கிடைத்துவிடும்.

ஒன்றுமட்டும் நிச்சயம் பார்லிமெண்ட் சபையை நீண்ட காலத்துக்கு ஒத்திவைத்தது அரசாங்கத்தின் பலத்தையோ, ஜனநாயகப் புகழையோ உயர்த்தாது இதற்கு மாருக அரசாங்கக்கட்சிக்கு ஏதோ பெரிய சங்கடம் இருக்கிறதென்பதையே இது காட்டும்.

ஜனநாயக தர்மத்துக்கு மாறுன இந்தத் தீர்மானத்துக்குப்பின், பாகிஸ்தான், சீனம் பின்பற்றும்முறையில் இலங்கையிலும் சர்வாதிகார நடவடிக்கைகள் எடுக்கப்படுமோ என்றும்சில அரசியல் வட்டாரங்கள் அஞ்சுகின்றன.

* * *

பாரணங்கி வணங்கிப் பணிசெய,நாரணன் பிரமன்னறியாததேர், காரணன் கடம்பந் துறைமேவிய, ஆரணங்கொரு பாறுடை மைந்தனே.

—திருநாவுக்கரசர்

---

## மகாமாரியம்மன் கோவில்

தெல்லிப்பழை, திங்கள்

தெல்லிப்பழை மகாமாரியம்மன் கோவிலின் வருடாந்த மகோற்சவம் எதிர் வரும் 18-3-63 புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 26-3-64 வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் 27-3-64 தீர்த்தோற்சவத்துடனும் முடிவடையும். விழாக்கள் 10 நாட்கள் நடைபெறும்.

25-3-64 புதன்கிழமை பிற்பகல் 3 மணிகது புது இரத வெள்ளோட்டம் நிகழும்.

## தேவை ஏற்படின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எனவே சாட்சிகளை அழைக்க வேண்டிய அவசியமில்லை.

தகா: ஐயா! அப்போதைய மந்திரி சபையின் வலதுசாரி, இடதுசாரி பிளவையும் புத்தரகித்தவே உருவாக்கினர் என்ற ஒரு குற்றச்சாட்டும் உண்டு. அதனலேயே நான் அபபோதைய மந்திரிகளை அழைக்கவேண்டுமெனக் கேட்டுக் கொண்டேன். நீங்கள் அதை ஏற்கவில்லை என்பதை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தலை: நீர் சொல்லும் வழியில் நாங்கள் அதை ஏற்றுக் கொள்வதற்கில்லை. நீர் சட்ட முறைப்படியே பிரதமராக தெரிவு செய்யப்பட்டீர். அதறகாத நீர் உம்மை பாதுகாத்துக் கொள்ளவேண்டிய அவசியமில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ளோம்.

தகா: திரு நிமால் கருணதிலகா கூறியவை பொய்யானது என நிரூபிக்க சாட்சிகளை அழைக்க வேண்டுமென நான் விரும்பினேன்.

தலை: நீர் பிரதமராக வருவதற்கு அரசியல் சதி செய்ததாக திரு. நிமால் கருணதிலக்கா தெரிவித்து ருசுப்படுத்தினர். அது சட்டமுறைப்படியான அரசியல் சதியாகும்.

தகா: திரு. நிமால் கருணதிலகாவின் சாட்சியம் மறைமுகமாக என்னை பண்டரநாயகாவின் கொலையுடன் சம்பந்தப்படுத்துகிறது. புத்தரகித்த கொலைக்கு உடந்தையாக விருந்த குற்ற வாளியாக நிரூபிக்கப்பட்டுள்ளார். அதனல் நானும் அதில் இழுக்கப்படுகிறேன். என்றே நான் கருதுகிறேன்.

தலை: உம்ம கொலை சம்பந்தமான விவகாரத்தில் இழுந்துவிட முடியாது ஆனல் உம்மையும் அதற்குள் இழுக்கும் தொனியில் சாட்சியம் இருக்குமானல் நீர் உமது சாட்சிகளை அழைக்கலாம்.

தகா: நிலை இவ்வாறு இருக்குமானல் இனிமேல் எனககு அவ்விதம் எனது சாட்சிகளை அழைக்கலாம் என ஒரு அறிவித்தல் கொடுக்க வேண்டுகிறேன்.

தலை: அவ்விதம் நாம் தெரிவிப்போம்.

இன்றைய கமிஷன் விசாரணையின் போது திரு. மைக்கல்பாஸ் சாட்சியமளித்தார்.

## இந்தியாவுக்கு . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கலந்து கொள்ளவேண்டியது அவசியமே. இது எந்தநாட்டிலும் உண்டு. கடந்த வருடம் இங்கிலாந்தில் இருந்து அமெரிக்காவிற்குச் சில அறிஞர்கள் சென்றதையிட்டு இன்றும் கவலைப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறர்கள்.

பிரபல அறிஞர்களை சர்வதேசிய மகாநாட்டிற்கு அளிப்பதன்மூலமே கல்வியைப் பெருக்கலாம். விஞ்ஞானம் உண்மையின் ஒருகோணப்பார்வையேயாகும். எனது கருத்துக்கெட்டியவரை விஞ்ஞானத்திற்கும் பண்பாட்டிற்கும் வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை."

வாணிகலைக்கழக சார்பில் ஆங்கிலத்திலும் தமிழிலும் வாழ்த்துப்பாக்கள் வாசித்து வழங்கப்பட்டன. ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறளும், நாலடியாரும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

கழக இயக்குனர் பண்டிதர் க. வீரகத்தியும் வேறு பலரும் பேசினர். க. தர்மலிங்கம் நன்றியுரை கூறினர்.

---

கொழும்பு. திங்கள்

ஏப்ரல் முதல் திகதி முதல் நாடு முழுவதும் பஸ் சேவைகளை விஸ்தரிக்க இ. போ. ச. முயற்சி எடுத்து வருவதாக அறிவிக்கப்படுகிறது. எந்த ஒரு நபரும் அன்று முதல் ஒரு பஸ் நிலையத்தில் 15 நிமிடங்களுக்கு மேல் பஸ்ஸுக்காக காத்திருக்காதபடி இந்த அபிவிருத்தி இருக்குமாம்.

## கோயில் ஐயர் கொலைவழக்கு

### ஏப்ரல் 6-ல் விசாரணை

யாழ்ப்பாணம், செவ்.

நாளை புதன் கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படவிருந்த உருத்திர புரம் கோவில் ஐயர் கொலைவழக்கு ஏப்ரல் 6-ம் தேதிக்கு பின் போடப்பட்டுள்ளது.

இன்று காலை அசைஸ் நீதிமன்றம் ஆரம்பமான போது, முடிக்குரிய வழக்கறிஞரான திரு. ஏ. ஏ. டி. சில்வா மேற்படி வழக்கில் முடிக்குரிய சிரேஷ்ட வழக்கறிஞர் ஆஜராகவேண்டியிருப்பதால் அதற்கு வசதியான முறையில் ஒத்திவைக்குமாறு நீதியரசரிடம் கேட்டுக்கொண்டார். இக்கோரிக்கை நீதியரசரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் உருத்திரபுரம் கோயில்ஐயர் காசிலிங்க சர்மாவை, முத்தர்வேலுபிள்ளை. பசுபதி, காலஞ்சென்ற ஐயரின் மனைவி கோகிலாம்பாள் ஆகியோர் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## சென்னைமேயர் கிருஷ்ணமூர்த்தி

சென்னை, மார்ச் 16

சென்னை நகர மேயராக சுயேச்சை அங்கத்தினர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி தெரிவு செய்யப்பட்டார். தி. மு. க.கவுன்சிலர்கள் அவரை ஆதரித்தனர்.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமிகோவில் 9-ம் திருவிழவான இன்றுமாலை 6மணி முதல் "திருஞானசம்பந்தர்" என்னும் பொருள் பற்றி திரு. மு. மயில்வாகனம் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

●

காலை 9-30-க்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சரின் ஜயந்தி விழா கொண்டாடப்படும் என அறிவிக்கப்படுகிறது.

## ரூ.20000 பெறுமான பொருட்கள் களவு

கொழும்பு, திங்கள்

ரூ. 20,000 பெறுமதியான ஒரு காரும், 2 டிரான்சிஸ்டர் ரேடியோக்கள், ஒரு விலை உயர்ந்த பவுண்டன் பேனு, ரொக்கம் ரூ. 500 ஆகியனவும் கொள்ளுபிட்டியிலுள்ள திரு. எஸ். ஜே. எப். டி. பண்டாரநாயகவின் வீட்டிலிருந்து திருடப்பட்டு விட்டதாயும், பொலிஸார் புலன் விசாரித்து வருவதாயும் அறிவிக்கப்படுகிறது

---


### இலக்கியவழி

( திருத்தப் பதிப்பு )

அரும்பத விளக்கமும் இரசனைக் குறிப்புஞ்சேர்ந்தது(ஆக்கியோன்: பண்டிதமணிசி.கணபதிப்பிள்ளை

நாவலர் எழுந்தார், சி. வை. தாமோதரம்பிள்ளை, வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளை, கவிஞர் மகாலிங்க சிவம் என நான்கு கட்டுரைகள் கூட்டப்பட்டது. அச்சு நடைபெறுகின்றது. விரைவில் வெளிவரும்.

அ. பஞ்சாட்சரம், (காரிய தரிசி), தி. சை. ஆ. க. ப. நூ. வெ. சபை. உரும்பராய் மேற்கு, உரும்பராய். 48

### தேவை

திறமையும் அனுபவமும் வாய்ந்த மெசின் எம்ப்ரோய்டறி தைக்கத் தெரிந்த இரு பெண் தொழிலாளர்கள் தேவை. விபரங்களுக்கு நேரில் விஜயம் செய்யவும்.

Jumylas, Kandy Road, Chavakachcheri. 49


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரல் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 17-ம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.